# மொழியினூடாக உருவாக்கப்படும் ஏற்றத்தாழ்வுகளும் வேறுபாடுகளும் மாணவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கங்கள் - கல்வி உளவியல் பகுப்பாய்வு

**கே. எல். பாத்திமா நப்லா**
துணை விரிவுரையாளர் (மெய்யியல்), சமூக விஞ்ஞானங்கள் துறை
கலை கலாசார பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

**ஆய்வுச்சுருக்கம்**

கற்றல், கற்பித்தல் செயன்முறையினை திறம்பட ஒழுங்கமைப்பது கல்வி உளவியலாகும். இது மாணவர்களிடம் உடல், உள்ளம், மனவெழுச்சி, அறநெறி ஆகியவற்றில் முழுமையான முதிர்ச்சியைப் பெற வழிவகுக்கிறது எனலாம். எம்மைச் சுற்றியுள்ளவற்றிற்கு நாம் அர்த்தம் வழங்க முற்படும் போது கற்றல் ஆரம்பமாகிறது. இதன் போது மொழி ஒரு கருவியாக செயல்படுகின்றது. ஒரு குறியீடாகவும், இணைப்பாகவும், ஊடகமாகவும் தொழிற்படும் மொழியினூடாக அர்த்தம் புரிந்து கொள்ளப்படுகின்றது. அப்புரிந்து கொள்ளலிலிருந்தே மனித சுயம், சமூகம், வரலாறு என அனைத்தும் தீர்மானிக்கப்படுகின்றன. இதன் போது மொழியினூடாக முன்வைக்கப்படும் ஆதிக்கக் கருத்தாக்கங்கள், ஒற்றை அர்த்த உருவாக்கம் மற்றும் மொழியில் உருவாக்கப்பட்டிருக்கும் இரட்டை எதிர்நிலைகள் என்பவற்றினை விளக்குவதாயும், அதனூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கட்டமைக்கப்பட்டிருக்கும் மைய – விளிம்பு உருவாக்கம் எவ்வாறு ஏற்றத்தாழ்வுகளையும் வேறுபாடுகளையும் ஏற்படுத்துகின்றது என்பதை எடுத்துக்காட்டுவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

**பிரதான சொற்கள்:** மொழி, கட்டமைத்தல், கட்டுடைப்பு, குறியீடு

## அறிமுகம்

உளவியல் என்பதற்கு பல விளக்கங்கள் வழங்கப்படுகின்றபோதும் 'உளம் பற்றிய ஆய்வே உளவியல்' என இலகுவாக புரிந்து கொள்ளப்படுகின்றது. Psychology என்ற ஆங்கிலப் பதத்திற்கு 'ஆன்மா குறித்த கல்வி' எனப் பொருள் கொள்ளலாம். பொதுவாக மனித உளச் செயற்பாடுகள் அது தொடர்பான நடத்தைச் செயன்முறைகள், சீராக்கங்கள் ஆகியவை பற்றி அக்கறை கொள்வதாக இது விளக்கப்படுகின்றது. உளவியல்ரீதியில் மனித உணர்வுகள், தேவைகள் மற்றும் எண்ணங்களை பாகுபடுத்துவதிலும், அது தொடர்பான வரையறைகளை வழங்குவதிலும் உளவியலாளர்கள் முன் நின்றனர். இத்தகையரீதியில் அவர்களால் உருவாக்கப்பட்ட

கோட்பாடுகளே மனித நடத்தையினை அச்சொட்டாகத் தீர்மானிக்கும் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டன.

அவ்வகையில் உளவியல் அதன் ஒழுங்கமைப்பு, செயற்பாடுகளுக்கேற்ப பல்வேறு வகையினதாக பிரிக்கப்பட்டது. அவை கல்வி உளவியல் (Educational Psychology), பிறழ்வு உளவியல் (Abnormal Psychology), குழந்தை உளவியல் (Child Psychology), வியாபார உளவியல் (Business Psychology), மனித வள உளவியல் (Human Resource Psychology), முகாமைத்துவ உளவியல் (Management Psychology) என நோக்கப்படுகின்றன.

இதில் கல்வி உளவியலானது (Educational Psychology) சிறப்பான வளர்ச்சிப் போக்கினைக் கொண்ட முக்கியமானதொரு துறையாகக் கொள்ளப்படுகிறது. இது பாடசாலை மட்டத்தில் நிகழும் கற்றல், கற்பித்தல் செயன்முறையைச் சார்ந்ததாகவே பொதுவாகப் பார்க்கப்படுகின்றது. ஒரு பிள்ளையின் ஆளுமை, மனவெழுச்சி விருத்தியில் முறைசார்ந்த கற்றல் - கற்பித்தல் கூடமாகப் பாடசாலையே முதல் பங்கினை வகிப்பதனால் அது தொடர்பான கரிசனை கல்வி உளவியலில் முதன்மையானதாகும். மேலும்விருத்தி, கற்றல்,ஊக்கல், போதனை ஆகியவற்றுடன் இணைந்த அனைத்துச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகவும் கல்வி உளவியல் காணப்படுகின்றது.இதன் அடிப்படை கற்பித்தல் என்றால் என்ன என்பதை விளக்குவதும் கற்றல் தொடர்பில் ஆராய்வதுமாகும்.

பாடசாலையில் கல்வி உளவியலானது மாணவர்களது உடல், உள்ளம், மனவெழுச்சி, அறநெறி ஆகியவற்றில் முழுமையான முதிர்ச்சியைப்பெற வழிவகுக்கிறது. இதற்கு ஆசிரியர் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை அறிந்து அவற்றை மாணவர்கள் விருத்தி செய்ய வழிவகுக்க வேண்டும்.இதன்படி வாசித்து விளங்குதல், சரியாகப் பேசுதல், எழுதுதல் ஆகிய அடிப்படைப் பழக்கங்களை விருத்தி செய்தல், மொழி, கணிதம், நுண்கலை, விஞ்ஞானம், சமயம் ஆகியனவற்றில் ஒன்றிணைந்த அறிவை வழங்கல், மாணவர்களின் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் உண்மைகளை ஆதாரமற்றவற்றிலிருந்து வேறு பிரித்தறிதல் ஆகிய அறிவுசார் திறன்களை வளர்த்தல், மனவெழுச்சி முதிர்ச்சியுடனான ஆளுமைப் பண்புகளை வளர்த்தல், சமூகத் தொடர்புகளைப் பேணுபவராகவும் சமூக முதிர்ச்சி உடையவராகவும் உருவாக்குதல் போன்றவை ஆசிரியரின் பொறுப்புக்களாக விளக்கப்படுகின்றது. (முத்துலிங்கம்: 21, 2010) எனவே கல்வி உளவியலாளது கற்பிக்கின்ற முறையியலை விளக்குவதாகவும், ஆசிரியருக்கு வழிகாட்டும் முயற்சியாகவும் தொழிற்படுகின்றது. மாணவர் திறன் ஊக்குவித்தலில் ஆசிரியரின் முக்கியத்துவம் இன்றியமையாததாக உணரப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

ஒரு முறைசார்ந்த வகுப்பறைக் கற்றல், கற்பித்தலில் மொழி பிரதான பங்களிப்புச் செய்கின்றது. சாதாரணமாக மொழியானது பேசுவதிலும், எழுதுவதிலும் பங்களிக்கிறது என்ற எண்ணமே அனேகருக்கு உண்டு. மேலும் பொதுவாக மொழி என்பது பல சொற்களையும் மனிதன் தனது சிந்தனையைப் பிறருக்கு அறிவிக்கக்கூடிய வகையில் அவற்றை இணைக்கும் செயன்முறையினையும் கொண்டுள்ளது என்ற கருத்தும் நிலவுகின்றது.

கற்றலில் மாணவர்களது அனைத்துச் செயற்பாடுகளையும் தீர்மானித்தல், கற்றல் திறன்களைப்பெறல் போன்ற அனைத்தையும் அமைக்கும் கருவியாக மொழி செயற்படுகின்றது. மட்டுமன்றி ஒரு குழந்தை பேச ஆரம்பிக்கும்போதே அதற்கு அது வாழும் சூழல், கலாசார அமைப்பு, பண்பாட்டு ஒழுங்கு, சமூக உறவு என்பன கற்பிக்கப்பட்டு விடுகின்றன. அக்குழந்தை வளரவளரப் பாடசாலை, கல்லூரி, அலுவலகம் என்று இக்கட்டமைப்புக்கள் அவ்வாறே தொடர்கின்றன. இப்பணியை மொழி மிகக்

கச்சிதமாக மேற்கொள்கிறது என்கின்றனர் பின்நவீனத்துவச் சிந்தனையாளர்கள். அதாவது இவை அனைத்தும் மொழியினூடாகவே கடத்தப்படுகின்றது. அதனையே குழந்தை பேசுகிறது, அறிகிறது, கற்றுக்கொள்கிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையில், பாடசாலை அல்லது கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களில் மொழியினூடாகக் கருத்தியல்ரீதியான ஏற்றத்தாழ்வுகளும் வேறுபாடுகளும் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன என்பது தொடர்பில் கவனம் செலுத்துவதோடு இத்தகைய செயற்பாடு கற்றல் கற்பித்தலில் எவ்வாறு வெளிப்படுகின்றது, அதன் மூலமான விளைவுகள் எத்தகையது என்பதை விளக்குவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

### கற்பித்தலில் மொழியின் பங்கு

தொடர்பு கொள்ளலில் மொழி அவசியமானது என்பது நாம் அறிந்ததே. குறிப்பாக வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்தியாக மொழி செயற்படுகின்றது. மொழித் தேர்ச்சியானது ஆரம்பக்கல்வி முதலே இன்றிமையாததாகிறது. ஏனெனில் எல்லாப் பாடங்களையும் புரிந்துகொள்ள மொழி மிகவும் அவசியமானதாகும். ஒரு குழந்தை மொழியின் மூலமே சிந்திக்கவும் முடிவு மேற்கொள்ளவும் மட்டுமன்றி மொழியின் உதவியுடனேயே செயற்படவும் செய்கின்றது. எனவே ஒரு குழந்தையின் கல்வியிலும் அதன் வளர்ச்சியிலும் மொழி ஒரு கருவியாகச் செயற்படுகின்றது என்பது கல்வியலாளர்களின் கருத்தாகும்.

கற்றுக்கொள்ளலானது எம்மைச் சுற்றியுள்ளவற்றிற்கு நாம் ஒரு அர்த்தத்தை வழங்க முற்படும் போது ஆரம்பமாகின்றது. அதாவது மனிதன் எல்லாவற்றிற்கும் மொழி மூலம் பெயர் சூட்டவும் அவற்றை இணைத்து அதற்கான அர்த்தம் வழங்கவும் முற்படுகின்றான். இவ் இணைப்பே எல்லாவற்றையும் பொருள் உள்ளவையாகக் காட்டுகின்றது. இவ்வாறான கருத்துக்கோர்வைகள் உருவாக்கவும் சிதைக்கவும் நம் மனதில் குறியீடுகள் பலவற்றை உருவாக்கி அவற்றிற்கிடையே தொடர்பினை ஏற்படுத்துகின்றோம். இந்தக் குறியீடுகளால் மனதளவில் உருவாகும் செயலான குறியீட்டு மாற்றம் கருத்தாக்கச் செயற்போக்கு எனப்படும். மொழியே இக்குறியீட்டு மாற்றத்திற்கு அடிப்படை. கருத்துக்கோர்வைகளுக்கு பெயரிடுதல் என்பது மொழியில் சொற்கள் எனப்படுகின்றன. இது புரிதலை மேம்படுத்தும் ஒரு செயற்பாடாகும். எனவே மொழியும் புரிதல் திறனும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன எனலாம். (ரோஹித் டங்கர், 2012)

பொதுவாக பேச்சு மொழி, எழுத்து மொழி என இரண்டுவிதமான மொழிப்பாவனைகள் எம் மத்தியில் காணப்படுகின்றன. ஒரு குழந்தை பாடசாலைக்கு வரும்வரையில் பேச்சு மொழியிலேயே தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறது. எனவேதான் புரிந்துகொண்ட அர்த்தங்களைத் தனக்கேற்றால் போல் வடிவமைத்துக்கொள்கிறது. இதிலிருந்து எழுத்து மொழி மாறுபட்டது. பேச்சு மொழி ஒலிக் குறியீடுகளாகும். எழுத்து மொழி உருவக வடிவங்களாகும். எனவே குழந்தை எழுத்து மொழியை பேச்சு மொழியாக மனதுக்குள் மொழி பெயர்த்து அர்த்தம் அறிந்துகொள்ளும் செயற்பாடு அங்கு நிகழ்கின்றது. இத்தகைய ரீதியில் ஒரு ஆசிரியரின் நிலையிலிருந்தும் மாணவர்களின் நிலையிலிருந்தும் மொழி பிரயோகப்படுமாற்றை விளக்கலாம். கல்வி உளவியல் கோட்பாடுகளின் மூலம் கல்வியலாளர்கள் மொழியினை கற்பிக்கப்படுகின்றதும், கற்பிக்கப் பயன்படுகின்றதுமான ஒன்றாக விளக்கமளித்தனர்.

### மொழியினூடாக உருவாக்கப்படும் ஏற்றத்தாழ்வும் வேறுபாடுகளும்

மொழியே மனித சுயத்தினைத் தீர்மானிக்கின்றது என்கிறார் சிந்தனையாளர் லக்கான் (Jacques Lacan). அதாவது மனிதன் ஒரு சமூக விலங்கு என்பதற்கு மொழி காரணமாக உள்ளது. மொழியின்றி சமூக உறவுகள் நிகழ்வதில்லை. லக்கானைப் பொறுத்தவரையில் மனித வரலாறு பேச்சில் இருந்து

தான் தொடங்குகின்றது. எனவே சமூக மனிதனை மொழி ஆளுவதால் மனித சுயத்தையும் மொழியே தீர்மானிக்கின்றது என்பது அவரது கருத்தாகும். (ரவிச்சந்திரன், 159: 2007)

ஒரு குழந்தை பேச ஆரம்பிக்கும் முன்னரே அது வாழும் சூழல் மற்றும் கலாசார அமைப்பு என்பன கட்டமைக்கப்பட்டு விடுகின்றன. அதாவது குழந்தை ஏற்கனவே உருவாக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட சூழலுக்குள் பொருந்தி வாழவே பணிக்கப்படுகின்றது. அதாவது ஒரு குழந்தை எந்த மொழியைப் பேச வேண்டும், எத்தகைய கலாசாரத்தைப் பின்பற்ற வேண்டும், எம்மாதிரியான சமூக உறவுகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பவை எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயங்களாகவே காணப்படுகின்றன.

இத்தீர்மானங்களை உருவாக்கும் பணியைப் பல்வேறு கருத்தியல் போர்வைகளுக்குள் ஆட்பட்டவர்கள் மேற்கொள்கின்றனர். வரையறைக்குட்பட்டரீதியில் உருவாக்கப்படும் கருத்தியல்கள் உள்ளடக்கம் மற்றும் செயற்பாட்டிற்கேற்ப பொருத்தமான பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அவை பாலினம், பொருளாதாரம், இனம், மதம், கலாசாரம், மொழி எனப் பலவாறாக அமையலாம். ஒவ்வொரு சமூகமும் இதனை மேற்கொள்ளும்போது அல்லது உள்வாங்கப்பட்ட கருத்தியலில் அதிருப்திக்குள்ளாகின்ற போது பிரிதொன்றுக்கான தேவை எழுகின்றது. அல்லது இவை எல்லாவற்றிலும் இருந்து வெளிவருகின்ற மனப்போக்கு காணப்படுகின்றது. இவற்றைத்தாண்டி காலங்காலமாக இருந்து வந்த கலாசாரம், மதம், சமூகக் கருத்துக்கள் மொழியினூடாக கருத்தியல் கட்டமைப்புக்களை உருவாக்குகின்றன. இவை பாடசாலைக்குச் செல்லும் முன்னரே பிள்ளையின் சுயத்தையும் அபிப்பிராயத்தையும் தீர்மானித்து விடுகின்றன.

இதனை மேலும் விளக்கமாக கூறுவதாயின் சமூகத்தால் பெயர் குறிக்கப்பட்ட சொற்பிரயோகங்களான ஏழை, பணக்காரன், அநாதை, பைத்தியம் போன்றன அவற்றிற்கான இயல்புகளையும், வரையறைகளையும் உருவாக்கி வைத்திருக்கின்றன. அவற்றுக்குட்பட்ட வகையிலேயே அதன் வரையறைகளும் வழங்கப்பட்டிருக்கும். இவை ஒரு வரிசைப்படுத்தல்களாக அமைக்கப்பட்டு வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வினையும் ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. அத்தகைய புரிதல்களுடனேயே குழந்தையின் வாழ்க்கை ஆரம்பமாகின்றது. அதுவே, பாடசாலையில் ஆசிரியர் உபயோகிக்கின்ற சொற்குறியீடுகள் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் உளவியல் தாக்கம் முக்கியமாக நோக்கப்பட வேண்டியதாகும். சாதாரணமாகவே ஒரு வகுப்பறை வரிசைப்படுத்தல்களால் நிரம்பியது. ஒவ்வொரு பாட அமைப்புக்களும், பரீட்சை பெறுபேறுகளும் இவ்வரிசைப்படுத்தலை உருவாக்குகின்றன. இதற்கேற்ப முதல் வரிசை மாணவர்கள், பின் வரிசை மாணவர்கள், புத்திசாலி, முட்டாள், திறமைசாலி, திறமையற்றவர் என்பன சொற்பிரயோகங்கள் அதிகமாக உபயோகிக்கப்படும் இடமாக வகுப்பறையினை எடுத்துக்காட்டலாம். இவற்றுக்கு வழங்கப்பட்டிருக்கும் அர்த்தம், மாணவர்களிடையே பெரும் மனத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

'புத்திசாலி' எனும் சொல்லிற்கான அர்த்தம் எல்லாம் தெரிந்தவன், முன்மாதிரி மாணவன் என்பதாகவும் 'முட்டாள்' எனும் சொல்லிற்கான அர்த்தம் வகுப்பில் எதற்கும் உதவாதவன், பின் வரிசையில் இருக்க வேண்டியவன், கற்க முடியாதவன் என்றரீதியிலேயே புரிந்து கொள்ளப்படுகின்றது. இந்த அடிப்படையில் ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அதேவேளை, இன்னொரு சாரார் புறக்கணிக்கப்படுகின்றனர் அல்லது விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவை மொழியினால் உருவாக்கப்பட்டு கருத்தியல் ஆதிக்கத்தைப் பெற்ற குறியீடுகளாக நிலைபெறுகின்றன. இம்மொழியினைக் கட்டுடைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டவராக பின்நவீனத்துவச் சிந்தனையாளர் ழாக் டெரிதா (Jacques Derrida) வைக் குறிப்பிடலாம்.

டெரிதா மொழியின் ஒற்றை அர்த்தத்தை தகர்த்தார். மையம் – விளிம்பு எனும் வகைப்படுத்தலைச் சுட்டிக்காட்டி இந்நிராகரிப்பு உருவாக்கும் விளிம்பு நிலையிலிருந்து சிந்தித்துக் கருத்தளித்தார். இவ்வாறு மொழியினூடாக உருவாக்கப்பட்ட இந்நிலைப்பாடு மாணவர் மனவெழுச்சி, ஆளுமை விருத்தியில் பாரிய பின்னடைவை எதிர்நோக்க வழிவகுக்கின்றது.

## மொழியின் இரட்டை எதிர்நிலையும் கல்வி முறைமையும்

பொதுவாகவே எல்லா விடயங்களுக்கும் எதிரெதிரான இரண்டு எதிர்நிலைகளில் வைத்து நோக்கப்படுகின்றது. அது எத்தகைய எடுகோளின் கீழ் அமைந்தது, அத்தகைய அமைப்பு சரியானதா?, அவை ஏற்படுத்தும் விளைவுகள் எத்தகையவை? என்பது தொடர்பில் கரிசனை செலுத்தப்படுதல் அவசியமானது.

உயர்ந்தது x தாழ்ந்தது, புனிதமானது x புனிதமற்றது, சிறந்தது x சிறப்பற்றது, நல்லது x கெட்டது, தேவையானது x தேவையற்றது போன்ற பல்வேறு வேறுபடுத்தல்கள் அடிப்படையில் அவை அமைகின்றன. இத்தகைய இரட்டை எதிர்நிலையானது, ஒன்றை முக்கியத்துவப்படுத்தியும் பிரிதொன்றை தாழ்த்தியும் அல்லது இழிவுபடுத்தியும் நோக்குகின்றது. இத்தகைய ஏற்றத்தாழ்வான நிலை மாணவர்கள் மத்தியில் உருவாக்கப்படுகின்றபோது அதன் பிரதிபலிப்பு பாதகமானதாகும்.

அதாவது வெறுமனே பரீட்சையை மையமாகக் கொண்ட கல்வி முறைமைகள், அதன் அடிப்படையிலான வரிசைப்படுத்தல்கள் மூலம் மாணவர்கள் தரம் பிரிக்கப்பட்டு கூடிய மதிப்பெண்கள் எடுத்த மாணவன் சிறந்தவன் என்றும் புத்திசாலி என்றும் கணிப்பிடப்படுகின்றான். மறுபக்கம் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவன் சிறந்த மாணவன் அல்ல என்றும் முட்டாள் என்ற நிலையிலுமான கற்பிதங்கள் முன்வைக்கப்படுகின்றன. 'நான் சரி – அவன் பிழை' என்ற நிலை உருவாகின்றது. இது மாணவர்கள் மத்தியில் ஆதிக்க மனநிலையினையும் அடிமை மனநிலையையும் விதைக்கத் துணை நிற்கின்றது.

மேலும் வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் உறவுகூட இவ்இரட்டை எதிர்நிலைக்கு உட்பட்டதேயாகும். ஆசிரியர் போதிக்கிறார்: மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர், ஆசிரியருக்கு எல்லாம் தெரியும்: மாணவர்களுக்கு ஒன்றும் தெரியாது, ஆசிரியர் பேசுகின்றார்: மாணவர்கள் கவனிக்கின்றனர், ஆசிரியர் ஒழுங்குபடுத்துகின்றார்: மாணவர்கள் ஒழுங்குபடுத்தப்படுகின்றனர், ஆசிரியர் பாடத்திட்டத்தை தேர்வு செய்கிறார்: மாணவர்கள் அதற்குள் தம்மை பொருத்திக்கொள்கின்றனர். இதன்மூலம் ஆசிரியரின் சொற்பொழிவினை எந்திரகதியில் மனப்பாடம் செய்யும் வேலையினையே மாணவர்கள் மேற்கொள்கின்றனர். இதன்படி எளிதாக நிரப்புபவரே சிறந்த ஆசிரியர் என்றும் எளிதாக நிரப்புவதற்கு ஏற்றவராக இருப்பவரே சிறந்த மாணவர் என்ற நிலை உருவாகி விடுகின்றது. (மார்க்ஸ், 27: 2003) இவ்வாறாகவே கற்பித்தலானது எவ்வித அறிவு முன்னேற்றமற்ற வெறுமனே பரீட்சையில் மட்டும் ஒப்புவிக்கும் செயற்பாடாக அமைந்து விடுகிறது. ஒரு கட்டத்துக்கு மேல் நகர முடியாத தேக்கநிலையை இது தோற்றுவிக்கவல்லது என்பதை இதனூடாகப் புரிந்துகொள்ள முடியும்.

## முடிவுரை

மொழிக் குறியீடுகள் உருவாக்கும் அர்த்தம் ஒற்றைத்தன்மையான முன்னேற்றத்தை ஊக்குவிப்பதால் பிற முயற்சிகளும், திறமைகளும் புறக்கணிக்கப்படுகின்றன. இது கட்டுடைக்கப்பட வேண்டியதாகும். இதிலிருந்து பன்மைத்தன்மை ஆதரிக்கப்படும் நிலை உருவாகும். மாணவர்களது பல்வகைத் திறமைகள் இனம்காணப்பட்டு அதன்வழி ஊக்குவிக்கும் செயற்பாடு நடைபெற வாய்ப்பளிக்கப்படும்.

மொழியின் இரட்டை எதிர் நிலைக்கான வரையறை தகர்க்கப்படுகின்றபோது உயர்ந்தவர் தாழ்ந்தவரை இழிவுக்குள்ளாக்கும் மனநிலை மறையும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இத்தகையதொரு நிலையே வகுப்பறையில் ஆசிரியர் ஒற்றையாட்சித்தன்மை நிலவக் காரணமாக அமைகின்றது. இந்நிலை மாற்றமுறுகின்றபோது மாணவர்களின் சிந்தனை மற்றும் ஆளுமை வளர்ச்சிக்கான சந்தர்ப்பம் உருவாக்கம் பெறும்.

மொழி வழங்கும் அர்த்தத்திற்கமைய பிரிக்கப்படும் புத்திசாலி / முட்டாள் என்ற வித்தியாசத்தன்மை மாணவர்கள் மத்தியில் இடைவெளி தோன்றக் காரணமாக அமைகின்றது. இது விரக்தி, மனச்சோர்வு போன்ற உளவியல் தாக்கத்திற்கு வழிவகுப்பதால் பிறழ்வான நடத்தைகளுக்கு காரணமாக அமையும்.

இவை அனைத்தினதும் வெளிப்பாடு 'சித்தி பெறல் - சித்தியடையாமை' என்ற அடைவினைக் கொண்டே கல்வியின் இறுதி அடைவு அமைகின்றது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக பரீட்சையைப் பிரதானமாகக்கொண்ட புள்ளி சார்ந்தவர்களாக மாணவர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். இது பொருத்தமற்ற வழிகாட்டலாக நிலைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, இவற்றின் பின்னணியில் மொழியினூடாக கட்டமைக்கப்பட்ட கருத்தியல் வன்முறை செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது கண்கூடு. இவ்வகையில் அமைந்த கற்றல் கோட்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியதாகின்றது.

**உசாத்துணைகள்**

1. முத்துலிங்கம், ச., (2010), 'கல்வியும் உளவியலும்', சேமமடு பதிப்பகம், கொழும்பு.
2. பாலசுப்பிரமணியம் தனபாலன், (2010), 'கல்விப் பிரயோக உளவியல்', குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. உலகநாதர் நவரத்திணம், (2007), 'கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கல்வி உளவியல்', குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. இரவிச்சந்திரன்,தி.கு., (2007), ' .ப்ராய்ட் யூங் லக்கான் - அறிமுகமும் நெறிமுகமும்', அடையாளம் பதிப்பகம், இந்தியா
5. இத்ரீஸ், ஏ.பிஎம்., (2007), 'அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள்', உயிர்ப்பைத் தேடும் வேர்கள், வாழைச்சேனை.
6. மார்க்ஸ், அ., (2003), 'ஒழுங்கவிழ்ப்பின் தேவைகள் சாத்தியங்கள்' அடையாளம் பதிப்பகம், சென்னை
7. ராமச்சந்திரன், ந.,(2012), ஆர்வம் கற்றல் மற்றும் மொழி Teachers of India website Retrieved from http://www.teachersofindia.